www.tamilarangam.net

# மனிதாபிமான வேண்டுகோள்..!




அன்பான ஈழத்தமிழ் உறவுகளே..! வணக்கம்,

நீர், நிலம், இனம், மொழி, பண்பாடு, மதம், உறையுள், உற்பத்தி, கலாச்சாரம் என அத்தனை சீர்களான வளங்களோடும் உலகினில் சிறப்புற்றவர்களே ஈழத் தமிழர்கள்.
இருந்தும் இன்று சியோனிசச் சிங்கள அரசும் - இந்தியப் பாசிசக் காங்கிரசும் இணைந்து நடாத்தும் தமிழின அழிப்புத் திட்டத்தில் தினந்தினம் செத்து மடிகின்ற ஈழத் தமிழ் மக்களின் மரண ஓலங்கள்..,
குடிநீர் - உணவு - மருந்தே இன்றி அங்கங்கள் அறுபட்டுத் தவிக்கின்ற தமிழ்மனித அவலங்கள் எங்கள் எல்லோர் காதுகளிலும் அறைந்து கேட்கின்றதல்லவா..,
இந்த ஓலங்களும் சாவுகளும் உங்கள் ஒவ்வொருவரின் வீட்டுக் கதவுகளையும் தட்டிவருகின்றமை பற்றிப் புரிகின்றதல்லவா?
சியோனிசச் சிங்கள அரசும் இந்தியக் காங்கிரசுப் பாசிச அரசும் கூட்டுச் சேர்ந்து செய்யும் சதித் திட்டங்களால் நடாத்தப்படுகின்ற மாபெரும் ஈழத் தமிழின அழிப்பினை, இந்த மனிதப் பேரவலங்களை உடன் நிறுத்துமாறு, தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் தெருக்களில்...,
குடும்பம் - வருவாய் - கல்வி - மகிழ்வு என அனைத்துத் தனி விருப்புகளையும் தவிர்த்துத்தான் தங்களின் வேரடி மண்நோக்கி தமிழ் மானமுள்ள அனைவரும் திரள்கின்றார்கள். மிகப் பெரும் மனிதாபிமானப் போராட்டங்களை நடாத்துகின்றார்கள். தங்களின் வேரடி உறவுகளின் மீட்புக்காக சர்வ தேசத்திடம் உயிர்ப் பிச்சை கேட்கின்றார்கள்.

## இந் நிலையில் தங்கள் முன் உள்ள கோரிக்கையானது...

- தாயகத்தின் மனிதப் பேரவலங்களையும், நாம் புலம் பெயர்ந்த மண்ணில் நடாத்தும் போராட்டங்களையும் மனதிற்கொண்டு, அவற்றுக்கு மேலும் பலம் சேருங்கள்.
- சமதளத்தில்..., ஊரழைத்துச் செய்யும் அனைத்துக் கொண்டாட்டங்களையும் நிறுத்துங்கள்.
- அனைவரும் இப்படியான கொண்டாட்டங்களை தவிருங்கள்.

ஈழவள நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் எம் ஈழத்தமிழ் உறவுகள் அனைவரிடமும், தமிழ்ப் பண்பாடுசார்ந்த மேற்படி மனிதாபிமானக் கோரிக்கைகளை 'செம்மைத்தமிழர் ஐரோப்பிய மையம்' முன்வைக்கின்றது.

தமிழீழ மனிதாபிமானப் பணிகளோடு...

செம்மைத்தமிழர் ஐரோப்பிய மையம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்